# பத்தாம் வகுப்பு~பொதுத்தேர்வு~மார்ச்~2015

## தமிழ் முதல் தாள்

www.Padasalai.Net

## விடைக் குறிப்புகள்

மொத்த மதிப்பெண்கள்: 100

பிரிவு~I (மதிப்பெண்கள் :20)

பகுதி~1

**I.உரிய விடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.** **6X1=6**

1. ஆ. குறள்
2. ஆ. பாரதிதாசன்
3. இ. நற்றிணை
4. ஆ. உலவு
5. ஆ. அரிச்சந்திரன்
6. இ. பெரியபுராணம்

பகுதி~2

**II.கோடிட்ட இடத்தை நிரப்புக.** **6X1=6**

7.அதிவீரராம பாண்டியன் (பிள்ளைப் பாண்டியன்)

8.தேவாரம்

9.சாலை இளந்திரையன்

10.பொருளியல்

11.நகர்த்தும் வண்டியில்

12.தனிஇனம்

பகுதி~3

**III. பொருத்துக:** **4X1=4**

13.படீ

14.சிவன்

15.கரடி

16.மாலை

பகுதி~4

**IV.விடைக்கேற்ற வினா அமைக்க.** **4X1=4**

17. பெண்ணுரிமைக்கு ஊறு விளைவிக்கும் பழைய நம்பிக்கைகளை ஏற்க மறுத்தவர் யார்?
18. எதன் வாயிலாய் நிகழ்வுகளை நம் இருப்பிடத்திலேயே கண்டுகளிக்கலாம்?
19. குமரிக்கண்டத்தில் தோன்றிய முதல் மனிதன் பேசிய மொழி எது?
20. சொல்லக் கருதும் செய்தியை எவ்வாறு சொல்லுதல் வேண்டும்?

(பொருத்தமான விடையிருப்பின் உரிய மதிப்பெண் அளிக்கலாம்)

பிரிவு-II
(மதிப்பெண்கள் :20)
பகுதி -I

www.Padasalai.Net

**V. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** **5X2=10**

21. வாய்ப்பற்ற காலத்தில் கொக்கைப் போல் அமைதியாகக் காத்திருத்தல் வேண்டும். உரிய காலம் வாய்த்ததும் கொக்கைப் போல் விரைந்து செயலைச் செய்து முடித்தல் வேண்டும்.

22. பிறர்க்குப் பணிந்தும் நல்வழியில் நடந்தும் மாண்புடைய சான்றோர் அறிவுரைகளைப் பின்பற்றியும் நுண்ணறிவு நூல்களை ஆராய்ந்தும் அவை நவிலும் வண்ணம் வாழும் பழியிலா மன்னன் நூல்களெல்லாம் போற்றும்படி வாழ்வான்.

23. i.தேனும் மீனும
ii.இராமனுக்குக் கொண்டு சென்றான்

24. அளவைகள் நிறைகோல் மக்கள் பசுக்கள் எருமைகள் மற்றும் உள்ள பொருள்கள் எல்லாவற்றிற்கும் திருநாவுக்கரசு எனப் பெயரிட்டார்

25. வெண்பா
ஆசிரியப்பா
கலிப்பா
வஞ்சிப்பா

26. குற்றம் கண்ட இடத்து இடித்துத் திருத்தும் பெரியாரின் பாதுகாப்பைத் தேடிக்கொள்ளாத அரசன்இ தன்னைக் கெடுக்கும் பகைவர்கள் இல்லையெனினும் தானே கெட்டழிவான்.

27. அறிவிலார் சொல் பொறுத்தல்

பகுதி-2

**VI. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் ஐந்தினுக்கும் மூன்று வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க:** **5X2=10**

28. தொன்மை முன்மை நுண்மை திண்மை எண்மை ஒண்மை இனிமை தனிமை இளமை வளமை தாய்மை தூய்மை மும்மை செம்மை இயன்மை வியன்மை.

29. பல்வகை விலங்குகளின் வாழ்க்கை
பன்னாட்டு மக்களின் வாழ்க்கை, நேரில் காணமுடியாத இடங்கள்

30. மதுரைக்காஞ்சி
பட்டினப்பாலை

www.Padasalai.Net

31. கண்ணப்பன்
ஊனுக்கு ஊன்

32. தாகத்திற்கு நீர் தருவதில் ஒன்றுமில்லை
தீமை செய்தவர்க்கும் நன்மையே செய் உண்மைப் பொருண்மை உண்டு

33. கடலூர் மாவட்டம்- சிதம்பரம் வட்டம்- மருதூரில்
5.10.1823-ல் பிறந்தார்.

34. இளங்கலை (பி . ஏ)
முதுகலை (எம்.ஏ)
இளம் அறிவியல்(பி.எஸ்.சி)
முது அறிவியல்(எம்.எஸ்.சி)

பிரிவு- III.
(மதிப்பெண்கள் :20)
பகுதி-1

VII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 3X4=12

35.* பல்வேறு துறை நூல்களை பிறர் துணையின்றி எல்லாரும் படித்தறிந்து கொள்ளும் வகையில் தமிழில் வெளியிடல் வேண்டும்.
* தமிழறிவை மதங்களுக்குள் அடக்காமை வேண்டும்.
* இலவச நூல் நிலையங்கள் ஊர்தோறும் ஏற்படுத்த வேண்டும்.
* தமிழின் பெருமைகளைக் கூறுவதிலேயே காலம் கழித்தோம்; குறைகளை நீக்கிப் புதுமைகளைப் படைத்தோமில்லை; உலகின் ஒளிமிக்க மொழியாகத் தமிழை வளர்ப்போம்.

36. விருத்தமாதவரை நோக்கி இராமன் கூறியவை

- உள்ளத்து அன்பு முதிர்வினால் எழுந்த பரிவின் காரணமாகக் குகன் கொண்டு வந்த இப்பொருள்கள் கிடைத்தற்கரியன.
- அமுதத்தைவிடச் சிறந்தன
- இவை எத்தகையனவாய் இருப்பினும் அன்பு கலந்ததெனில் தூய்மையானவையே
- எம் போன்றோர்க்கும் உரியன
- ஆகையால் இனிமையான இவை நாங்கள் விரும்பி உண்டதற்கும் சமம்.

\- ஏன இராமன் கூறினான்.

37. தலைவனுக்குத் தோழி கூறும் செய்தியினை நற்றிணைப் பாடல்வழித் தொகுத்து எழுதுக

**மருத நில வளம் :**

- உழவர் நெற்கதிர்களை அறுவடை செய்த பின்னர் அழகிய வயலை மறுபடியும் பயிர்செய்ய உழுதனர்.
- பனையோலைப் பெட்டியில் விதை கொண்டுசென்று ஈரமுள்ள அந்நிலத்தில் விதைத்தனர்.
- அவர்கள் அங்குள்ள நீர்நிலைகளில் மீன்களைப் பிடித்து அப்பெட்டியில் கொண்டு வருகின்ற புது வருவாயை உடைய மருதநில தலைவனே

**செல்வம் ஆகாது :**

- அரசால் சிறப்புச் செய்யப் பெறுதலும்
- யானை, தேர், குதிரை முதலிய ஊர்திகளில் அவ்வரசர் முன்னிலையில் விரைந்து செல்லுதலும் செல்வச் சிறப்பன்று.
- அது அவரின் முன்வினைப் பயன் .

**செல்வம் என்பது:**

- தன்பால் புகலிடம் தேடிவந்த எளியோரைக் கைவிடாமல் காக்கும் பண்பே செல்வம் ஆகும் என சான்றோர் கூறுவர்.

38. புலியின் கொடுஞ்செயல்கள்

- புலியானது, கூர்மையான நகங்களையுடைய சிங்கக் கூட்டங்களைத் தவிர, மற்ற விலங்குகளின் இறைச்சியை உண்ணும்.
- பெரிய பனை போன்ற தும்பிக்கையையும், மூன்று மதங்களையுமுடைய யானைகளின் கொம்புகளை பிடித்து இழுத்து
- அவற்றின் மார்பினைக் கிறி, குருதியினை குடித்து
- உறங்காமல் நின்று, பெரிய மலைகளும் அதிருமாறு இடியைவிட அதிகமாக முழங்கும்.
- புலி முழங்கிடும் ஓசையைக் கேட்ட காட்டெருமை, பன்றி, கரடி, கலைமான்கள் உடல் தடுமாற்றம் அடையும்.

39. சாதனைப் பூக்கள்

- மன உறுதி இருந்தால் விண்ணையும் கடந்து வெற்றிக் காணலாம்.
- இன்று ஓய்வெடுத்து நாளைச் செல்லலாம் என்று இருந்தால் ஓர் இரவுக்குள் என்ன நடக்குமோ ?
- பணியை முடித்து ஓய்வெடு.
- இனிக்கும் செய்தி வந்து குவியும்.
- செடிகள் பூப்பதற்கு முன் ஓய்வெடுப்பதில்லை.
- செடியின் வெற்றி பூவில் உள்ளது.
- உனது வெற்றியால் துன்பங்கள் ஓடும்.

பகுதி-2

**VIII. கீழ்க்காணும் வினாக்களுள் எவையேனும் மூன்றினுக்கு ஆறு வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: www.Padasalai.Net 3X4=12**

40. பெண்ணுரிமை – விளக்கம்

- பெண்கள் உரிமைப் பெற்றுப் புது உலகைப் படைக்க வேண்டும் என பெரியார் விரும்பினார்.
- ஆணுக்குப் பெண் இளைப்பில்லை என்று சிந்தித்தார்.
- பெண்கள் தத்தம் கணவனுக்கு மட்டுமே உழைக்கும் அடிமையாக இராமல் மனித சமுதாயத்திற்கு தொண்டாற்றும் புகழ் பெற்ற பெண்மணிகளாக விளங்க வேண்டும் என்று வலியுறுத்தினார்.

41. அம்பேத்கர் பெற்ற கல்வித் தகுதிகள்

- 1908 - எல்பின்ஸ்டன் பள்ளியில் உயர்நிலைப் படிப்பு
- 1912 - பரோடா மன்னர் பொருளுதவியுடன் பம்பாய் எல்பின்ஸ்டன் கல்லூரியில் இளங்கலைப் பட்டம்.
- 1915 - அமெரிக்காவில் கொலம்பியா பல்கலை கழகத்தில் முதுகலை பட்டம்.
- 1916 - இலண்டனில் பொருளாதாரத்தில் முனைவர் பட்டம்.

42. பேச்சின் தொடக்கம்

- பேச்சைத் தொடங்குவது எடுப்பு
- தொடக்கம் நன்றாக இல்லாவிட்டால் கேட்பவர்களுக்கு நல்லெண்ணம் தோன்றாது.
- தட்டுத்தடங்கலின்றிப் பேசுவதற்குத் தொடக்கமே அடித்தளம்.
- கேட்போரை வயப்படுத்தும் முறையில் பேசசைத் தொடங்குதல் வேண்டும்.
- அவையோர்தம் உள்ளங்களைக் கேட்கும் பக்குவத்தில் வைத்திருக்கவேண்டும்.
- அவையோரை விளித்து சுருக்கமான முன்னுரையுடன் தொடங்குவது நல்லது.
- இடத்திற்கும் சூழலுக்கும் ஏற்பத் தொடக்கம் அமைதல் நன்று.

43. கடல் வாணிகம்

- கடல் வாணிகத்தில் தமிழர் சிறந்திருந்தனர். பொன்னும், மணியும், முத்தும், துகிலும் கொண்டு கடல்கடந்து வாணிகம் செய்தனர்.
- பூம்புகார் முதலான பெருநகரங்கள் வணிகர் வாழும் இடங்களாய் இருந்தன.
- கிறித்து பிறப்பதற்கு முன்பே கிரேக்கம் உரோமாபுரி எகிப்து ஆகிய நாடுகளுக்கு அரிசியும் மயில்தோகையும் சந்தனமும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.
- கி.மு. 10 ஆம் நூற்றாண்டில் அரசன் சாலமனுக்கு யானைத் தந்தமும் மயில்தோகையும் வாசனைப் பொருள்களும் தமிழகத்திலிருந்து அனுப்பப்பட்டன.
- தமிழருக்கு சாவக நாட்டுடனும் கடல் வாணிகத் தொடர்பு இருந்தது.

www.Padasalai.Net

44. மனித நேயம் குறித்து காந்தியடிகள் கூறியது

- என்னைப் பொருத்தவரை தேசாபிமானமும் மனிதாபிமானமும் ஒன்றுதான்.
- நான் தேசபக்தனாக இருப்பதற்கு அடிப்படை காரணம் மனிதாபிமானியாக இருப்பதுதான்.
- மனிதர் மொழியாலும் நாட்டாலும் உணர்த்தப்படுவதைக் காட்டிலும் மனிதத் தன்மையால் பிறருக்கு உணர்த்தப் பெறுவது சிறப்பு.
- நான் மொழியால் குஜராத்தியன்; நாட்டால் இந்தியன்; உலக நிலையில் உலகன்
- ஆனால் மனிதனாக இருத்தல் வேண்டும்.

பிரிவு- IV

(மதிப்பெண்கள் :10)

**IX. கீழ்க்காணும் பாடலைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:** 5X1=5

45. i அதிவீரராம பாண்டியன் (பிள்ளைப் பாண்டியன்), வில்லிப்புத்தூரார், ஒட்டக்கூத்தர்

ii. செவி + அறுத்து

iii. போலிப்புலவர், கீழானவர்

iv. பாத்தனதாக், கூத்தனிவர் ; குட்டிச், வெட்டிக்

v.தமிழ்விடு தூது

**46. கீழ்க்காணும் உரைப்பகுதியைப் படித்து வினாக்களுக்கு விடையளிக்க:** 5X1=5

i.தமிழர்

ii.பொன்னும் மணியும் முத்தும் துகிலும்

iii.கிரேக்கம், உரோமாபுரி, எகிப்து

iv. யானைத்தந்தமும் மயில்தோகையும் வாசனைப்பொருள்களும்

எ. தமிழர் கடல் வாணிகம்

பிரிவு- V

(மதிப்பெண்கள் : 26)

பகுதி-1

**X. கீழ்க்காணும் வினாக்களுக்கு பத்து வரிகளுக்கு மிகாமல் விடையளிக்க: 2X8=16**

47. அ) ஒழுக்கமுடைமை பற்றி வள்ளுவர் கூறும் கருத்துகள்:

**ஒழுக்கத்தின் உயர்வு :**

www.Padasalai.Net

i. ஒருவருக்கு அனைத்து சிறப்புகளையும் தருவது ஒழுக்கமே. ஆதலால் அவ்வொழுக்கத்தை உயிரினும் மேலானதாகக் கருதிக் காத்தல் வேண்டும்.

ii. எம்முறையில் ஆராய்ந்து பார்த்தாலும் ஒழுக்கமே நல்ல துணையாகும்.ஒழுக்கத்தைக் காப்பது கடினமானாலும் எப்பாடுபட்டாவது அதனை விரும்பிக் காத்தல் வேண்டும்.

**ஒழுக்கத்தின் குணம் :**

iii. ஒழுக்கம் உள்ளவரே உயர்குடியினர்; அவ்வொழுக்கம் இல்லாதவர் இழி குடியினர்.

iv. ஒருவன் தான் கற்ற கல்வியை மறந்தாலும் அதனை மீண்டும் கற்றுக் கொள்ள இயலும். ஆனால் ஒழுக்கம் குறைந்தால் அவனுடைய குடிப்பிறப்பின் சிறப்பு அழிந்து போகும்.

v. பொறாமை உடையவனிடம் செல்வம் நிலைக்காது. அதுபோல ஒழுக்கம் இல்லாதவனிடம் ஒழுக்கம் இருக்காது.

vi. ஒழுக்கம் தவறுதலால் ஏற்படும் குற்றங்களை நன்குணர்ந்த மனவலிமை மிக்கோர் அவ்வொழுக்க நெறியிலிருந்து சிறிதும் விலகமாட்டார்.

**ஒழுக்கம் இன்மையால் ஏற்படும் குற்றம் :**

vii. ஒழுக்கமுடையோர் மேன்மை அடைவர். ஒழுக்கம் இல்லாதவர் அடையக் கூடாத பழியை அடைவர்.

**ஒழுக்கத்தின் விளைவு :**

viii. நல்லொழுக்கம் என்பது நன்மை என்னும் விளைவைப் பெறுவதற்கான விதையாகும். தீயொழுக்கம் எப்போதும் துன்பத்தையே விளைவாகத் தரும்.

**சொல்லாலும் செயலாலும் வரும் ஒழுக்கம்**

ix. நல்லொழுக்கம் உடையோரால் தவறியும் தம் வாயால் தீமை தரும் சொற்களைச் சொல்ல இயலாது.

x. உயர்ந்தாரோடு பொருந்த வாழும் கல்வியைக் கல்லாதவர் எவ்வளவுதான் கற்றிருந்தாலும் அறிவில்லாதவரே ஆவார்.

(அல்லது)

ஆ) கலித்தொகை கூறும் வாழ்க்கை நெறிமுறைகள்:

ஆற்றுதல், போற்றுதல்

* இல்வாழ்வென்பது வருந்தி வந்தோர்க்கு உதவுதல்
* பாதுகாப்பென்பது அன்புடையோரைப் பிரியாது வாழ்தல்

www.Padasalai.Net

பண்பு, அன்பு

* பண்பெனப்படுவது சான்றோர் வழி அறிந்து ஒழுகுதல்
* அன்பெனப்படுவது சுற்றம் தழுவி வாழ்தல்.

அறிவு, செறிவு

* அறிவெனப்படுவது அறிவிலார் சொல் பொறுத்தல்
* செறிவெனப்படுவது கொடுத்த வாக்கைக் காத்து நிற்றல்

நிறை, முறை, பொறை

* நிறைவு எனப்படுவது பிறர் அறியாது மறை பொருள் காத்தல்
* நீதிமுறைமை எனப்படுவது ஒருபால் கோடாது ஒறுத்தல்
* பொறுமை எனப்படுவது இகழ்வாரையும் பொறுத்துக்கொள்ளுதல்

48. அ) திரைப்படம் எடுத்தலுக்குத் தேவையான ஆயத்தப் பணிகள்:

ஊமைப்படங்களைப் பேசும் படங்களாக மாற்றுவதற்குப் பல்வேறு அறிவியல் அறிஞர்கள் அயராது உழைத்ததனால் திரைப்படத்துறை மாபெரும் வளர்ச்சியை எட்டியது. திரைப்படத்துக்குரிய கதையுடன் கதைமாந்தர் தேர்வு செய்யப்பட்டனர். கதை உரையாடல் பாடல் முதலியன முதலில் ஆயத்தம் செய்யப்பட்டன. பின்னர் அவர்களுக்கு ஏற்ற உடைகள் வடிவமைக்கப்பட்டன. திரைப்பட நடிகர் நடிகையர் அவர்களுக்குத் தோழர் தோழியர் பணியாளர்கள் என நடிகர் பலர் தேர்வு செய்யப்பட்டனர்

நடிகரின் குரல் இசைவாக இல்லாவிடில் மற்றொருவர் குரல் தரும்முறை கொண்டுவரப்பட்டது. நடிப்பாற்றலை எடுத்துக்கூறிச் சில நேரங்களில் தாமே நடித்தும் காட்சிகள் அமைத்தும் படம் முடியும்வரை உழைக்கும் நுண்மாண்நுழைபுலம் உடையாரை இயக்குநர் என்பர்.அவருக்கு உதவியாகத் துணை இயக்குநர் பணியாற்றுவார். படம் எடுத்தலைப் படப்பிடிப்பு என்பர். திரைப்படக்கலை இவ்வாறு காலத்திற்கேற்ப வளர்ச்சி பெற்றது.

(அல்லது)

(ஆ) தமிழன் அறிவியல் முன்னோடி

விண்ணியலறிவு

உலகம் — பேரண்டத்தின் கோள் — தமிழ் இலக்கியங்கள் — திருவாசகம் — புறநானூற்றுப் பாடல்கள்.

பொறியியல் அறிவு

கரும்பைப் பிழிவதற்கு எந்திரம் — பதிற்றுப்பத்து ஆழ்துளைக்கிணறு — அந்தக்கேணியும் எந்திரக்கிணறும் ; பெருங்கதை — எந்திர யானை — டிராய் போர் — எந்திரக் குதிரை.

கனிமவியல் அறிவு

சிலப்பதிகாரம் — ஐவகை மணிகள் — வெவ்வேறு பெயர்கள் — மூலப்பொருள்கள் ஒன்றே.

மண்ணியல் அறிவு

ஐவகை நிலங்கள் – நிறத்தின் அடிப்படையில் – தன்மையின் அடிப்படையில் – புறநானூற்று வரிகள் – ஐவகை நிலங்களுக்குரிய உணவு, விலங்கு, பறவை.

அணுவியல் அறிவு

ஔவை– அணுவைத் துளைத்து ஏழ்கடலைப் புகட்டி– கம்பர் – ஓர்அணுவினைச் சதகூறிட்ட– அணுச்சேர்ப்பு–அணுப்பிரிப்பு.

நீரியல் அறிவு

திருவள்ளுவர் – நீர்சுழற்சி – 'நெடுங்கடலும் தன்நீர்மை' – அமிழ்தம்– மழை.

மருத்துவ அறிவு

திருமூலர் – 'உடம்பார் அழியின் உயிரார் அழிவர்'

திருவள்ளுவர் – மருந்து அதிகாரம் – சித்த மருத்துவம் – இயற்கை மருத்துவம்.

அறுவை மருத்துவம்

கண்ணப்பன் வரலாறு – கம்பர் வாக்கு – மணிமேகலை – திருவாசகம்

49. செய்யுள் வடிவில் விடை தருக: 2+2+6=10

அ) நன்றிக்கு வித்தாகும் நல்லொழுக்கம் தீயொழுக்கம்
என்றும் இடும்பை தரும்

ஆ) குன்றேறி யானைப்போர் கண்டற்றால் தன்கைத்தொன்
றுண்டாகச் செய்வான் வினை

---

இ) சிலப்பதிகாரம்

வாயிற் கடைமணி நடுநா நடுங்க
ஆவின் கடைமணி உகுநீர் நெஞ்சுடத் தான்தன்
அரும்பெறல் புதல்வனை ஆழியின் மடித்தோன்
பெரும்பெயர்ப் புகாரென் பதியே அவ்வூர்
ஏசாச் சிறப்பின் இசைவிளங்கு பெருங்குடி
மாசாத்து வாணிகன் மகனை யாகி
வாழ்தல் வேண்டி ஊழ்வினை துரப்பச்
சூழ்கழல் மன்னா நின்னகர்ப் புகுந்திங்
கென்காற் சிலம்புபகர்தல் வேண்டி நின்பாற்
கொலைக்களப் பட்ட கோவலன் மனைவி

- இளங்கோவடிகள்